
பக்கங்கள்:-20

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 16 | வெள்ளிக்கிழமை | 30.01.2026 | அதிர்வு 183 |
| --- | --- | --- | --- | --- | --- |

## “இலங்கையில் நிபா வைரஸ் அபாயம் குறைவு”



### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

இலங்கையில் நிபா வைரஸ் பரவும் அபாயம் தற்போது மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் 06



# நீதிமன்றுக்கு இழுத்து அரசியல் பழிவாங்கல்!

## அநுர அரசு மீது நாமல் பாய்ச்சல்

“தற்போதைய அரசு தனது தோல்விகளையும், ஊழல்களையும் மூடிமறைப்பதற்காகவே எம்மை நீதிமன்றத்துக்கு இழுக்கின்றது. இதனால் அரசுக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார். 07

## கிவுல் ஓயா திட்டம் மூலம்

# வவுனியா - முல்லைத்தீவு மாவட்டங்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்க முயற்சி!

## போராட்டத்தில் ஒன்றிணையுமாறு சத்தியலிங்கம் எம்.பி. அழைப்பு

(கி.வசந்தன்)

“கிவுல் ஓயா திட்டம் மூலம் வவுனியா – முல்லைத்தீவு மாவட்டங்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. எனவே எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை கிவுல் ஓயா நீர்த்தேக்கத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கும் போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற 06






இப்படியும் சில அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பற்றிய தகவலை அறிய வேண்டும் என்பதற்காக இந்த விடயத்தை இன்று பிரஸ்தாபிக்கிறேன்.

முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயர் சீவ் மார்ஷல் (ஓய்வு) ஹர்ஷ அபேவிக்ரம.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றமையை அடுத்து அவர் விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனத்தினுடைய தலைவராக நியமிக்கப்பட்டார்.

சர்வதேச தர நிலைகளுக்குப் பரிந்துரைக்கப்படாத சில நடைமுறைகளை இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் முன்னர் பின்பற்றி வந்தது என்றும், அவற்றை நீக்கிக் கடுமையான நிர்வாகக் கட்டமைப்புகள், நடைமுறைகளை நிலை நிறுத்தி, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் வழிகாட்டல்படியான கடுமையான பாதுகாப்பு நெறிமுறைகளை விமான நிலையங்களில் 06

# பதவியாசைக்கும் கதிரைப் போட்டிக்குமான கட்சியாக இலங்கைத் தமிழரசு மாறியுள்ளது

## தேசிய மக்கள் சக்தியின் எம்.பி. கந்தசாமி பிரபு விசனம்

(வாலகிருஸ்ணா)

தமிழ் மக்களின் உரிமையை நோக்கிச்சென்ற இலங்கை தமிழரசுக் கட்சி இன்று பதவியாசைக்கும் கதிரைப்போட்டிக்குமான கட்சியாக மாறியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சி இன்று பலவிதமாகக் சிதைந்துபோய் தமிழர்களின் உரிமையை வென்றெடுப்பதை மறந்து, தங்களுக்கான முயற்சியை வென்றெடுப்பதற்கான முயற்சியையே முன்னெடுத்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.




நேற்றுக் களுவாஞ்சிகுடியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றக் குழுத்தலைவர் சிறிதரனுக்கு எதிராக தங்களது கட்சிக்குள்ளேயே குழப்பநிலையை ஏற்படுத்திக்கொண்டு, அவரை அரசமைப்புக் கவுன்சிலிலிருந்து விலகவேண்டும் என்ற விடயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனைப. போன்று நாடாளுமன்ற குழுவின் தலைவர் பதவியிலிருந்தும் அவரை விலக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அறியக் கிடைக்கின்றது.

இவர்களின் உட்கட்சி பூசல் என்பது தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை கேள்விக்குறியாக்கியுள்ளது. இவர்களுக்கு பின்னாக் தமிழ் மக்கள் அணிதிரள்வார்களா என்ற சந்தேகம் இன்று எழுந்துள்ளது.

ஏனைய கட்சிகள் தங்களுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளை மறந்து ஒன்றுபடும்போது தமிழரசுக் கட்சி மட்டும் அடிப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

இன்று வடகிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு தளம் அதிகரித்து வருகின்றது.இன்று வடமாகாண மக்கள் தேசிய மக்கள் சக்தியையும் ஜனாதிபதியையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நாட்டிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்துள்ளனர். இன மத வேறுபாடுகள் கடந்து இன்று தேசிய மக்கள் சக்தியுடன் பயணித்து வருகின்றனர்.

புதிய அரசமைப்பு தொடர்பாக தேர்தல் காலங்களில் வாக்குறுதியொன்றை வழங்கியிருந்தோம். இது தொடர்பான முன்னெடுப்புகளையும் அரசாங்கம் முன்னெடுத்தது. ஆனால் திக்வா புயல் இந்த நாட்டில் ஏற்படுத்திய அழிவுகள் காரணமாக நாடு பின்தங்கிய நிலையை அடைந்தது. அதிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையினை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. விரைவில் புதிய அரசமைப்பு மற்றும் மாகாணசபை தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். - எனத் தெரிவித்தார்.

# பிரஜா சக்தி முறைமையை தற்போது எதிர்க்கவேண்டிய தேவை இல்லை!

## சங்கின் பிரதேசசபை உறுப்பினர் உபதேசம்

(மரியசீலன் திலைக்ஸ்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் கொண்டுவரப்படுகின்ற பிரஜா சக்தி முறைமையை நாங்கள் தற்போது எதிர்க்க வேண்டிய தேவை இல்லை என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பருத்தித்துறை பிரதேச சபை அமர்வில் பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ் அரசாங்கத்தின் பிரஜா சக்தி முளைமைக்கு எதிரான பிரேரணையை முன்வைத்தார்.

இதற்கு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர் சுயேச்சை மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இது



தொடர்பான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

சபை முடிவின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த உறுப்பினர் கணைச் செல்வன் கூறியவை வருமாறு:-

கிராமங்களை அபிவிருத்தி செய்ய ஒவ்வொரு அரசாங்கமும் இந்தப் பிரஜா சக்தியை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவர்கள் எவ்வாறான வேலை திட்டத்தை செய்ய போகிறார்கள் என்று யாருக்கும் இதுவரை தெரியாது. அது நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்பே அதை எதிர்ப்பது ஒரு தவறான விடயம். பிரதேச சபையில் பிரஜா சக்திக்கு எதிரான பிரேரணை கொண்டுவருவது தவறான விடயம்.

பிரஜா சக்தி உறுப்பினர்கள் மக்களுக்கு விரோதமாக செயற்பட்டால் அவர்களை நாம் எதிர்ப்போம். ஆனால் தற்போது அவர்களை எதிர்ப்பது என்பது தவறான விடயம். - எனத் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையில் பிரஜா சக்திக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் 10 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காணி மத்தியஸ்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் திருமலை மாவட்டத்தில் புதனன்று வழங்கி வைப்பு!







**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்ட விசேட காணி மத்தியஸ்த குழாத்திற்கான புதிய தவிசாளர்,உபதவிசாளர் மற்றும் மத்தியஸ்தர்களுக்கு புதன்(28) நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.எம்.ஹேமந்த குமார நிகழ்வில் முதன்மை விருந்தினராக பங்குபற்றி மத்தியஸ்தர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தார்.

இவ் மத்தியஸ்த குழாத்தின் புதிய தவிசாளராக திருமதி.ஏ.எம்.தாஹீராவும்,உபதவிசாளராக திருமதி. டபிள்யூ.ஏ.நில்மினி பிரியங்கிக்காவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் செயற்படும்,மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் காணி மத்தியஸ்த குழாத்திற்கான மத்தியஸ்தர்களுக்கான மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு,கிழக்கு உற்பட நாட்டின் 16 நிர்வாக மாவட்டங்களில் விசேட காணி மத்தியஸ்த சபை இயங்கி வருகின்றது.

திருகோணமலைக்கான இவ்காணி மத்தியஸ்த குழாம் 2018 ம் ஆண்டில் முதல்முறையாக நீதி அமைச்சினால் அமைக்கப்பட்டது.இதனை அடுத்து தற்போது இக்குழாத்திற்கான தவிசாளர், உபதவிசாளர் உற்பட மத்தியஸ்தர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப்பிரிவுகளின் தமிழ்,முஸ்லீம்,சிங்கள சமூகங்களைச் சேர்ந்த அரச அலுவலர்கள்,ஓய்வுநிலை அரச அலுவர்கள் 29 பேர் மத்தியஸ்தர்களுக்கான நியமனத்தை பெற்றுள்ளனர்.

அரச மற்றும் தனியார் காணிகள் தொடர்பில் எழும் அனைத்து பிணக்குகளையும் கலந்துரையாடி,இணக்கத் தீர்வுகளை இவ் காணி மத்தியஸ்த குழாம் வழங்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நியமனம் வழங்கும் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன்,மாவட்ட மத்தியஸ்த பயிற்சி அதிகாரி வே.சவரிநாயகம்,மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எச்.எம்.குருகுலசூரிய,மாவட்ட மத்தியஸ்த அலுவலர் திருமதி.எஸ். பவானி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

குழாத்திற்கான புதிய தவிசாளர், உபதவிசாளர் மற்றும் மத்தியஸ்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.எம்.ஹேமந்த குமார நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றி மத்தியஸ்தர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தார்.

இவ் மத்தியஸ்த குழாத்தின் புதிய தவிசாளராக திருமதி.ஏ.எம்.தாஹீராவும், உபதவிசாளராக திருமதி.டபிள்யூ. ஏ.நில்மினி பிரியங்கிக்காவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் செயற்படும், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் காணி மத்தியஸ்த குழாத்திற்குரிய மத்தியஸ்தர்களுக்கான மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு,கிழக்கு உட்பட நாட்டின் 16 நிர்வாக மாவட்டங்களில் விசேட காணி மத்தியஸ்த சபை இயங்கி வருகின்றது.

திருகோணமலைக்கான இக்காணி மத்தியஸ்த குழாம் 2018 ம் ஆண்டில் முதல் முறையாக நீதி அமைச்சினால் அமைக்கப்பட்டது. இதனை அடுத்து தற்போது இக்குழாத்திற்கான தவிசாளர் , உபதவிசாளர் உட்பட மத்தியஸ்தர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளின் தமிழ்,முஸ்லிம்,சிங்கள சமூகங்களைச் சேர்ந்த அரச அலுவலர்கள்,ஓய்வுநிலை அரச அலுவர்கள் 29 பேர் மத்தியஸ்தர்களுக்கான நியமனத்தைப் பெற்றுள்ளனர்.

அரச மற்றும் தனியார் காணிகள் தொடர்பில் எழும் அனைத்து பிணக்குகளையும் கலந்துரையாடி, இணக்கத் தீர்வுகளை இக்காணி மத்தியஸ்த குழாம் வழங்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நியமனம் வழங்கும் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட மத்தியஸ்த பயிற்சி அதிகாரி வே.சவரி நாயகம். மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எச்.எம்.குருகுல சூரிய, மாவட்ட மத்தியஸ்த அலுவலர் திருமதி.எஸ்.பவானி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வீரசிங்கம், சித்தாறு அணைக்கட்டின் வேலைகள் தாமதமின்றி விரைந்து முடிவுறுத்தப்படவேண்டும்

## வலியுறுத்துகின்றார் ரவிகரன் எம்.பி.





**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு கமநலசேவைநிலையப் பிரிவிலுள்ள, புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைப்புப் பகுதியில் உள்ள வீரசிங்கம் மற்றும் சித்தாறு அணைக்கட்டுக்களை அமைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் கேள்வி எழுப்பிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அந்த அணைக்கட்டுக்களின் வேலைத்திட்டங்களை விரைவாக முடிவுறுத்தி விவசாயிகளின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் இந்த அணைக்கட்டுக்களின் வேலைகளை முடிவுறுத்துவதற்கு ஒப்பந்ததாரர்கள் உடன்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், அவ்வாறு பெப்ரவரி மாத்திற்குள் இந்த வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தப்படாவிட்டால் தம்மால் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் பதிலளித்துள்ளர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் -

உலக வங்கியின் நிதி உதவியில் 'சியாப்' நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைபின்கீழ் காணப்படும் வீரசிங்கம் மற்றும் சித்தாறு அணைக்கட்டுக்களை அமைப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் எம்மிடம் முறையிட்டுள்ளனர்.

இதனால் தாம் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனவும் எம்மிடம் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

இந்த சித்தாறு மற்றும் வீரசிங்கம் அணைக்கட்டுக்களை அமைப்பதற்காக விவசாயிகள் ஒருபோகம் நெற்செய்கை மேற்கொள்ளாது விட்டுக்கொடுப்பையும் மேற்கொண்டனர் என எம்மிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக நான்கு மாதகாலத்திற்குள் முடிவுறுத்தப்படவேண்டிய இந்த அணைக்கட்டுக்கள் அமைக்கும் வேலைத் திட்டங்கள், அந்தக் கால எல்லையைத் தாண்டியும் இதுவரை முடிவுறுத்தப் படவில்லை.

எனவே இதனால் புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைப்பைச்சேர்ந்த விவசாயிகள் எதிர்நோக்கும் பாதிப்புகளை கவனத்திற்கொண்டு இந்த அணைக்கட்டு வேலைத்திட்டத்தினை விரைவாக முடிவுறுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கு மாவட்டத்திற்குள் தீர்வுகாணத் தவறினால் நாடாளுமன்றம் வரை இவ்விடயத்தை எடுத்-துச்செல்வேன். விவசாய அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் விவசாய அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டியிருக்கும்.

ஆகவே விரைந்து இந்த அணைக்கட்டு வேலைத்திட்டங்களை முடிவுறுத்-தி விவசாயிகளிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் பதிலளிக்கையில் -

தற்போதுதான் புதிதாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளேன். இருப்பினும் கடந்த 21.01.2026 புதன்கிழமையன்று அந்த இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளேன்.

அத்தோடு அதனைத் தொடர்ந்து கிளிநொச்சியில் அமைந்துள்ள 'சியாப்' திட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் இதுதொடர்பில் பேசியிருந்தேன்.

அமைக்கப்பட்டுவரும் அணைக்கட்டுக்களின் அமைப்புகளில் 'டித்வா' புயல் அனர்த்தம் காரணமாக சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், எனவே அணைக்கட்டுக்களை அமைப்பதற்கு மேலதிக நிதி தேவைப்படுவதாகவும் ஒப்பந்ததாரர் தரப்புக்களால் இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேலதிகநிதி தேவையெனில் 'சியாப்' திட்ட தலைமை அலு-வலகத்துடன் தாம் கலந்துரையாடி ஒப்பந்ததாரர்களுக்கு மேலதிக நிதியை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதாக 'சியாப்' திட்ட கிளிநொச்சி அலுவலக உத்தியோகத்தர்களால் ஒப்பந்ததாரர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை பெப்ரவரி மாதத்திற்குள் இந்த அணைக்கட்டுக்களின் வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்படவேண்டுமெனவும் ஒப்பந்ததாரர்களுக்கு இதன்போது அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அந்த வகையில் ஒப்பந்ததாரர்களாலும் இந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து.

எனவே பெப்ரவரி மாதத்திற்குள் இந்த அணைக்கட்டுக்களின் வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்படவில்லை எனில் உரிய நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும்.

அதுவரை எமக்குகால அவகாசத்தினைத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். என முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.






# ரூ. 4 கோடி செலவில் மஸ்கெலியா நகரில் புதிய மிருக வைத்தியசாலை அமைகின்றது

(மஸ்கெலியா விசேட நிருபர்)

மஸ்கெலியா நகரில் ஆலய வீதியில் முன்னைய மிருக வைத்திய சாலைக்கு அருகில் சகல வளங்களும் கொண்ட மிருக வைத்திய சாலைக்கு மஸ்கெலியா மிருக வைத்திய சாலையின் மிருக வைத்திய அதிகாரி தலைமையில் நேற்றுக் காலை பத்து மணிக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இவ் வைபவத்தில் மத்திய மாகாண மிருக வைத்திய அத்தியட்சகர்,மத்திய மாகாண மிருக வைத்திய உதவி அத்தியட்சகர், நாவலப்பிட்டி பகுதிக்கு பொறுப்பான மிருக வைத்திய அதிகாரி, ஹட்டன் பகுதிக்கு பொறுப்பான மிருக வைத்திய அதிகாரி, பொகவந்தலாவ பகுதிக்கு பொறுப்பான மிருக வைத்திய அதிகாரி, நுவரெலியா மாவட்ட மிருக வைத்திய அத்தியட்சகர் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா இராஜ்குமார், மஸ்கெலியா பிரதேச சபையின் உறுப்பினர்கள், செயலாளர், மஸ்கெலியா மிருக வைத்தியசாலையில் உள்ள ஏனைய அதிகாரிகள், மஸ்கெலியா பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மஸ்கெலியா சுமாரான விகாரையில் உள்ள பௌத்த மத குருவின் சமயக் கிரியைகளைத் தொடர்ந்து சுப வேலையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கு உரையாற்றிய மத்திய மாகாண மிருக வைத்திய அத்தியட்சகர் –

1968 ம் ஆண்டு காலப் பகுதியில் கட்டப்பட்ட வைத்திய சாலை முழுமை பெறாத நிலையில் இருந்தது. இவ்வைத்திய சாலையில் அடிக்க வைத்தியர்கள் மாற்றம் பெற்று சென்றனர். காரணம் தங்குமிடம் இல்லை.

தற்போது இன்றைய அரசு முன்வந்து நவீன முறையில் மிருக வைத்திய சாலை, வைத்தியர்கள் தங்குமிடம் மற்றும் ஏனைய முழுமைப்படுத்த பட்ட மிருக வைத்திய சாலை ஒன்றை நான்கு கோடி ரூபா செலவில், மிருக வைத்திய சாலைக்கு உரித்தான இடத்தில் அமைக்க முன் வந்து உள்ளது.

இந்த கட்டிடம் இன்னும் ஒரு வருடத்தில் கட்டப்பட்டு இப் பகுதியில் உள்ள அனைத்து பண்ணையாளர்களும் பயன் பெறத் தக்க விதத்தில் மக்கள் பாவனைக்கு விடபட உள்ளது. – என்றார்.

இந்த நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா இராஜ்குமார் மற்றும் உறுப்பினர்கள் உரையாற்றினார்கள்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துமாறு அவர் பணிக்கப்பட்டிருந்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பின்புலத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. ஜப்பானில் இருக்கின்ற விகாரை ஒன்றின் தலைமை மத குருவான வண. பனகல உபதிஸ்ஸ நாயக்க தேரர், கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குள் தம் இஷ்டப்படி சென்று வருவதற்கான அனுமதிச்சீட்டை வழங்கும்படி ஒரு கோரிக்கையை ஏயர் சீவ் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரமவிடம் வைத்தார்.

ஆனால் அதை வழங்க அவர் மறுத்துவிட்டார். உத்தியோகபூர்வ கடமைகளைச் செய்யத் தேவையான விமான நிலைய ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மட்டுமே அத்தகைய நிரந்தர விமான நிலைய அனுமதிச்சீட்டுக்கள் வழங்கப்பட முடியும் என்றும், இதற்கு வெளியே உள்ள நபர்களுக்கு அத்தகைய அனுமதிச்சீட்டு வழங்கப்பட முடியாது என்றும், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நுழைவு அனுமதி தேவைப்பட்டால், அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் விமான நிலைய அதிகாரியிடம் தெளிவான காரணங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தால் அத்தகைய கோரிக்கை பரிசீலிக்கப்பட முடியும் என்றும் அவர் அந்தத் தலைமை பிக்குவுக்குப் பதில் அனுப்பினார்.

ஆயினும், அந்தப் பதிலுக்கு பின்னரும் விமானப் போக்குவரத்து அமைச்சர் அத்தகைய அனுமதிச் சீட்டை வழங்குவதை அங்கீகரிக்குமாறு ஹர்ஷ அபேவிக்ரமவுக்கு அறிவுறுத்தினார் எனத் தெரிய வருகிறது.

அத்தகைய அணுகலுக்குப் பாஸ் வழங்குவது சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பின் தரநிலைகளை மீறும். அத்தோடு சாத்தியமான தேசியப் பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்தும் என்றும் கூறி அனுமதி வழங்க மறுத்த அபயவிக்ரம, உடனடியாகத் தமது இராஜினாமாக் கடிதத்தையும் அமைச்சருக்கு அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதம் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகி உள்ளன.

தேசியப் பாதுகாப்பு உணர்திறன் கொண்ட நிறுவனங்களை நிர்வகிக்கும் விடயங்களில் கூட அரசியல் தலையீடு மற்றும் விதிவிலக்குகள் இடம் பெறுகின்றமை விமான போக்குவரத்து நிபுணர்கள் மற்றும் நிர்வாகிகளிடையே பெருத்த சலசலப்பை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது.

இதுதான் தேசிய மக்கள் சக்தி ஏற்படுத்த முயன்ற 'மாற்றம்' என்பதா?

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறிதரன் எம்.பியை விலக்குவதற்கு தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு முடிவெடுத்துள்ள பின்புலத்தில் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு எதிராக கட்சிக்கு வெளியிலிருந்து பல தரப்புக்களினாலும் அரசியல் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன.

அந்த வரிசையில் தாக்குதல் தொடுத்தவர் மறவன் புலவு சச்சிதானந்தன்.

சி.வி.கே.சிவஞானத்தை 'கொலைகாரன்' என்று குறிப்பிடுகின்ற அளவுக்கு அவரது விமர்சனங்கள் அண்மையில் ஊடகப் பேட்டியாக வெளியாகி இருந்தன.

அவர் குறிப்பிடுகின்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் இடம்பெற்ற சமயம் சி.வி.கே.சிவஞானம் யாழ் மாநகர சபையின் ஆணையாளர் அல்லர். அப்போதுதான் கணக்குப் பிரிவில் அவர் கணக்காளர் பதவி உயர்வைப் பெற்றிருந்தார் – அதுவும் தரநிலை 3 இல். அதனால் ஆணையாளர் விடுமுறையில் உள்ள சமயத்தில் பதில் ஆணையாளராகக் கடமையாற்றும் தர நிலையில் கூட அவர் அப்போது இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தச் சமயத்தில் ஆணையாளர் எடுக்க வேண்டிய முடிவுகளை சிவஞானம் எடுக்கத் தவறியமை மூலம் அந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டையொட்டி இடம்பெற்ற படுகொலைகளுக்கு சிவஞானம் காரணம் என்ற சாரப்பட மறவன்புலவு சச்சிதானந்தன் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் எவ்வளவு தூரம் நம்பகமானவை என்ற கேள்விகள் எழுகின்றன.

'கொலைகாரன்' என்ற அளவுக்குப் பகிரங்கக் குற்றச்சாட்டுகள் அமைந்திருப்பதால் இந்த விடயம் பெரும்பாலும் நீதிமன்றுக்குப் போகும் என்று தெரிகின்றது. தமது குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு சட்ட ரீதியான ஆதாரங்களை முன்வைக்க வேண்டிய தேவை – கட்டாயம் – மறவன் புலவு சச்சிதானந்தத்திற்கு நேரலாம் என்று நினைக்கிறேன். அது மாத்திரமல்ல, அந்தப் பேட்டியை பிரசுரம் செய்த – ஒளிபரப்பிய – ஊடகங்களுக்கும் சில சட்டக் கடப்பாட்டுப் பிரச்சினைகள் நேர வாய்ப்புண்டு.

அடுத்து வரும் வாரங்களில் நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## "இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து சுகாதார மற்றும் ஊடக அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், நிபா வைரஸ் தொடர்பாக நிலவும் அச்சம் குறித்துத் தெளிவுபடுத்தியுள்ள செயலாளர், பொதுமக்கள் தேவையற்ற பீதி அடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"அண்மைக் காலத்தில் இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் ஒரு சில நிபா வைரஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழலைக் கருத்தில்கொண்டு சர்வதேச பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கவில்லை.

நிபா வைரஸ் பிரதானமாக விலங்குகளுக்கு இடையிலேயே, குறிப்பாக வௌவால்கள் மூலம் பரவுகிறது. பாதிக்கப்பட்ட விலங்குகள் அல்லது பொருட்களுடன் மிக நெருங்கிய தொடர்பு ஏற்படும் போது மட்டுமே மிகவும் அரிதாக மனிதர்களுக்கு இது பரவக்கூடும்.

மனிதர்களுக்கிடையில் இந்தத் தொற்று பரவுவது மிக நெருக்கமான மற்றும் நீண்ட காலத் தொடர்புகள் மூலம் மட்டுமே நிகழ்கின்றது. இது இன்புளுவென்சா போன்று காற்றின் மூலம் எளிதில் பரவக்கூடிய ஒரு வைரஸ் அல்ல.

இலங்கையில் இந்நோயைக் கண்டறிவதற்கும் எதிர்கொள்வதற்கும் போதிய வசதிகள் உள்ளன." – என்றும் மருத்துவர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டுள்ளார்.

"நோயாளிகளை விரைவாகக் கண்டறிய இலங்கையில் வலுவான நோய் கண்காணிப்பு அமைப்பு நடைமுறையில் உள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் இந்நோயைக் கண்டறிவதற்குத் தேவையான நவீன ஆய்வக வசதிகளைக் கொண்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பிராந்திய ரீதியிலான நோய் நிலைமைகளைச் சுகாதார அமைச்சு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது." – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தேவையற்ற அச்சமடையத் தேவையில்லை என்றும், சரியான தகவல்களுக்கு உத்தியோகபூர்வ அறிவிப்புகள் மற்றும் நம்பகமான ஆதாரங்களை மட்டுமே பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

---

## வவுனியா - முல்லை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் தாயகம் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வன்னி பிரதேசத்தில் கிவுல் ஓயா நீர்த்தேக்கத் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குறிப்பாக வவுனியா மற்றும் முல்லைத்தீவில் வாழ்கின்ற மக்களின் இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாட்டை முன்னெடுக்கும் நோக்குடனும், எங்களுடைய மக்களின் பொருளாதாரத்தை அழிக்கின்ற செயற்பாடாக இந்தத் திட்டம் அமையவுள்ளது.

அத்தோடு வனவளத்திணைக்களமே குறித்த பிரதேசத்தினுடைய பாரியளவான காட்டை அழிப்பதற்கு உறுதுணையாக இருப்பதற்கும் நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதோடு, பாரிய ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளோம்.

அதன் அடிப்படையில், இந்த ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை நெடுங்கேணி பஸ் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே, எமது எதிர்காலத்தைச் சிந்தித்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், பொதுமக்கள் என அனைவருக்கும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கின்றோம்." – என்றார்.



# அஸ்வெசும கொடுப்பனவில் மோசடி: பிரதேச செயலக அதிகாரி மீது சந்தேகம்

கதிர்காமம் பிரதேச செயலகத்தில் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வழங்கப்பட்டதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கதிர்காமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் பயனாளி ஒருவருக்குச் சொந்தமான அஸ்வெசும கொடுப்பனவு நிதியை மோசடி செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கதிர்காமம் பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரகீத் குலதிலக்க, பிரதேச செயலக அதிகாரி ஒருவருக்கு எதிராக கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமக்குச் சேர வேண்டிய கொடுப்பனவை அதிகாரி ஒருவர் சட்டவிரோதமான முறையில் பெற்றுள்ளதாகப் பயனாளி ஒருவர் தொலைபேசி ஊடாக பிரதேச செயலாளருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இது குறித்து மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில், 2023 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்த கொடுப்பனவுகள் அனைத்தும் அலவ்வ பகுதியிலுள்ள ஒரு தனியார் வங்கி கிளையில் பயனாளியின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

பயனாளியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி, அவருக்குத் தெரியாமலேயே இந்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை விசாரணையில் உறுதியாகியுள்ளது.

மேற்படி வங்கிக் கணக்கை தற்காலிகமாக முடக்குமாறு பிரதேச செயலாளர் வங்கி நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது ஒரு திட்டமிட்ட நிதி மோசடி எனக் கருதும் பிரதேச செயலாளர், இது குறித்து முறையான மற்றும் விரிவான விசாரணை நடத்துமாறு பொலிஸாரை கேட்டுக்கொண்டுள்ளார்.

கதிர்காமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஓலுகல வலான ஊழல் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளரானார்



உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஓலுகல, வலான ஊழல் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரொஹான் ஓலுகல, தற்போது மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணை பிரிவின் பணிப்பாளராக செயற்படுகின்றார்.

கெஹெல்பத்தர பத்மே, கொமாண்டோ சலிந்த, இஷார செவ்வந்தி உள்ளிட்ட வெளிநாட்டில் தலைமறைவாகியிருந்த, திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை கடந்த காலப்பகுதியில் நாட்டிற்கு அழைத்து வருவதற்கு ரொஹான் ஓலுகல நேரடியாக தொடர்புபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்றுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் கலந்துகொண்டுவிட்டு நேற்றுமுன்தினம் இரவு நாடு திரும்பிய அவர், நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசு மேற்கொண்டுள்ள நிலக்கரி ஊழல் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்கள் மாயமான சம்பவங்களை மறைப்பதற்காக எம்மை நீதிமன்றத்துக்கு அழைப்பதில் எந்தப் பயனும் இல்லை. மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பைத் திசைதிருப்பவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.” – என்றார்.

தமக்கு வழங்கப்பட்ட அழைப்பாணை குறித்துப் பேசிய நாமல் எம்.பி.,

“பெலவத்தையிலிருந்து நியமிக்கப்பட்ட பொலிஸ்மா அதிபருக்கு நாட்டின் பொலிஸ் துறை எவ்வாறு செயற்படுகின்றது என்பது கூடத் தெரியவில்லை. தங்காலைக்கும் கொழும்புக்கும் இடையிலான தூரம் கூட அவருக்குத் தெரியவில்லைப் போலும். காலை 9.30 மணிக்கு முன்னிலையாகுமாறு கூறி, 9.50 மணிக்கு அழைப்பாணையைத் தருவது நகைப்புக்குரியது.

ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகள் மட்டும் அல்ல, காசோலைகள் வங்கிகளில் மறுக்கப்படுகின்றன. புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட காசோலைகளும் செல்லுபடியாகவில்லை. முன்னைய காலத்தில் நாடு திவாலானதாகக் கூறப்பட்டபோது கூட காசோலைகள் மறுக்கப்பட்டதில்லை. ஆனால் இப்போதுதான் நாடு உண்மையாகவே திவாலாகியுள்ளது.” – என்றார்.

இந்தியாவின் கலிங்கா பல்கலைக்கழகம் விடுத்த அழைப்பின் பேரிலேயே தாம் அங்கு சென்றனர் என்றும், இதனைப் பார்த்து இங்குள்ளவர்கள் தேவையற்றுப் பதற்றமடைய வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எமனாகும் ரயில் கடவைகள்

வடக்குக்கான ரயில் சேவை இப்போது பாதை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. எப்போது மீண்டும் சேவை ஆரம்பமாகும் என்பதை இப்போது நம்பிக் கூறிவிட முடியாது. அண்மைக்கால சூறாவளிப் பேரிடருக்குப் பின்னரும் வடக்குக்கான பாதை சீராக இருந்த போதிலும், வடக்குக்கு இரவு ரயில் சேவை அனுமதிக்கப்படவில்லை. யானைகளுடன் ரயில்கள் மோதுவதைத் தவிர்ப்பதற்காக இந்த இரவு ரயில் சேவை ரத்து என்று உத்தியோகப்பற்றற்ற முறையில் கூறப்பட்டது.

யானைப் பாதுகாப்பு குறித்து கவலைப்படும் இலங்கை ரயில்வேத் துறை மக்களின் பாதுகாப்புக் குறித்துச் சிந்திக்கின்றதா என்ற கேள்வி இப்போது எழுகிறது.

இலங்கையின் ரயில்வே அமைப்பு அதிகரித்து வரும் பாதுகாப்பு நெருக்கடிகளை எதிர்கொள்கிறது எனக் கூறப்படுகின்றது. அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 400க்கும் மேற்பட்ட ரயில்வே கடவைகள் பாதுகாப்பற்றனவாக திறந்தே உள்ளன.

2020 மற்றும் 2024க்கு இடையில், ரயில்வே கடவைகளில் குறைந்தது 385 விபத்துக்கள் பதிவாகியுள்ளன. இதன் விளைவாக 37 இறப்புகள் ஏற்பட்டுள்ளன. 105 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவங்களில் பலவும் பாதுகாப்பற்ற ரயில்வே கடவைகள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகளை மோசமாக நடைமுறைப்படுத்தியமை காரணம் என்பது விசாரணைகளில் தெரிய வந்தது.

பாதுகாப்பற்றவை என அடையாளம் காணப்பட்ட நானூறுக்கும் மேற்பட்ட கடவைகளில், 185 தனியார் கடவைகளாக உள்ளன. எஞ்சியவை ரயில்வேத் துறையின் பொறுப்பில் வருபவை.

ரயில்வே துறையின் பொறுப்பில் உள்ள மொத்தம் 1,177 கடவைகளில் 300 இற்கு மட்டுமே ரயில்வே கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. 438 கடவைகள் சமிக்ஞை அமைப்புகளுடன் இருந்தன. கைமுறையாக இயக்கப்படும் கதவுகளுடன் உள்ள சுமார் 200 கடவைகள் உட்பட மீதமுள்ள 439 கடவைகள், பாதுகாப்பற்றவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அபாயங்கள் இருந்தபோதிலும், விரிவான சீரமைப்பு நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. பெரும்பாலான பாதுகாப்பற்ற கடவைகள் இப்போது ஆபத்தானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன எனவும், ரயில் நிலையங்கள் எச்சரிக்கைகளை வெளியிட்டு, தற்காலிக நடவடிக்கைகளாக வேக வரம்புகள் மற்றும் பலகைகளை நிறுவியுள்ளன எனவும் ரயில்வே துறை தெரிவித்துள்ளது. இருப்பினும், மேலும் உயிரிழப்புகளைத் தடுக்க அவசர மற்றும் நிரந்தரப் பாதுகாப்பு தலையீடுகள் தேவை என்பதை ரயில்வேத் துறை ஒப்புக்கொண்டது.

தடைப் படாத போக்குவரத்து சேவை நாட்டுக்கு மிக மிக அவசியமானது. ஆனால், அது, மக்களுக்கு பாதுகாப்பானதாகவும் பயனுள்ளதாகவும் அமைய வேண்டும்.

வேகமாகப் பயணிக்கும் ரயில்கள் தரைப்போக்குவரத்தில் ஆபத்தை விளைவிக்கும் யமனாகத் தொடர்ந்து விளங்குவதை அனுமதிக்க முடியாது.

இது குறித்து தீர்க்கமான முடிவை ரயில்வே துறையையும் உள்ளடக்கிய போக்குவரத்து அமைச்சு எடுத்தாக வேண்டும் என்று கருதுகிறோம்.

மக்களை ஆபத்தில் ஆழ்த்தாத போக்குவரத்து சேவையை வழங்குவதுதான் போக்குவரத்து அமைச்சின் கடமை. அதில் அந்த அமைச்சு நீதி, நியாயம், நேர்மையாக - பொறுப்புணர்வோடு - செயல்படுவதாக இல்லை என்பதுதான் கள யதார்த்தமாகும்.

# வாகரையில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளுடன் 4 பேர் கைது!

(கனகராசா சரவணன்)

வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கட்டுமுறிவு பிரதேசத்தில் சட்டவிரோதமான உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கிகளுடன் 4 பேரை நேற்று வியாழக்கிழமை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து தங்களிடம் ஒப்படைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து அந்தப் பிரதேசத்தில் நேற்றுக் காலை வாகரை விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி பி.பி.அமில தலைமையிலான குழுவினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.




இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகள் நான்கை மீட்டமையுடன் 32, 48, 28, 42 வயதுடைய நான்கு பேரை கைது செய்தனர். இவர்கள் அந்தப் பகுதியைச்சேர்ந்தவர்கள் எனவும், வன விலங்குகளை இறைச்சிக்காக துப்பாக்கியால் சுட்டு வேட்டையாடி வருபவர்கள் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர் எனவும், இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கலாபூஷணம் அரசரத்தினம் காலமானார்





(வி.ரி. சகாதேவராஜா)

கல்வி, இலக்கியம், சமூக சேவை ஆகிய துறைகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அரிய மனிதர்களில் ஒருவரான மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் ஆறுமுகம் அரசரத்தினம் நேற்று முன்தினம் புதன்கிழமை 83 ஆவது வயதில் சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இலக்கிய சேவையை பாராட்டி கலாபூஷணம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் விருதும் வழங்கப்பட்டன.

களுதாவளையில்1943ஆம்ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி பிறந்த அவர், சிறு வயதிலிருந்தே அறிவாற்றல், ஒழுக்கம், சமூக பொறுப்பு ஆகிய பண்புகளை வளர்த்துக் கொண்டவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தமிழ் சிறப்பு பட்டத்தைப்பெற்றமையுடன் செல்லம்மா இராஜகோபால் விருதையும் பெற்றமை அவரது தமிழ்ப்புலமையை வெளிப்படுத்துகிறது.

களுதாவளையைச் சேர்ந்த பூமணி என்னும் நங்கையை திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரேயொரு பிள்ளை.

ஏகபுதல்வினிதாகிழக்குபல்கலைக் கழக நுண்கலை சிறப்பு பட்டதாரி. தற்சமயம் பட்டிருப்பு வலய அழகியல் கல்வி இணைப்பாளராக சீரிய பணியாற்றி வருகிறார். வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷை 2003இல் அவர் கரம்பற்றினார்.

தொழில்முறை வாழ்வில் அரசரத்தினம் கச்சேரி எழுது வினைஞர், அரச உத்தியோகஸ்தர், விவசாய போதனாசிரியர் என பல பொறுப்புகளை வகித்துள்ளார். விதைத்தொழில் கண்காணிப்புப் பொறுப்பாளராகவும் செயல்பட்டு கிராமிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்துள்ளார்.

பின்னர் ஆசிரியராக, பட்டதாரி ஆசிரியர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக பல பதவிகளில் பணியாற்றி இறுதியில் தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக பட்டிருப்பு வலயத்தில் அரிய சேவையாற்றினார்.

அதனூடாக எண்ணற்ற மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துள்ளார்.

அவரது நீண்டகால இலக்கிய சேவையைப்பாராட்டி கலாபூஷணம் விருது, முதலமைச்சர் விருது போன்ற கௌரவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலக்கிய உலகில் அரசரத்தினம் தனித்துவமான இடம் பெற்றவர். நவீனக் காப்பியவியல் (நான்கு தொகுதிகள்), முருகன் காப்பியம், பிள்ளையார் கதை, காப்பியவியற்கல் உள்ளிட்ட பல நூல்கள் அவரது ஆழ்ந்த தமிழறிவை வெளிப்படுத்துகின்றன.

இவரது படைப்புகள் தமிழ் இலக்கிய ஆர்வலர்களிடையே கவனம் பெற்றுள்ளன.

அவரால் இயற்றப்பட்ட பொன்னூஞ்சல் பாடல் அவரது மருமகன் சுரேட்ஹ் தலைவராக விருக்கும் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம், களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயம், உகந்தமலை முருகன் ஆலயம், தாந்தாமலை முருகன் ஆலயம் உள்ளிட்ட 18 ஆலயங்களில் இன்றும் பாடப்பெற்று வருவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மௌனம் கற்றுக் கொடுக்கும் ஞானமும், சொல் கற்றுக் கொடுக்கும் தமிழும் அவரது வாழ்வின் இரண்டு கண்களாக விளங்கின.

கல்வி, இலக்கியம், சமூக சேவை என மூன்றையும் ஒருங்கிணைத்த அரசரத்தினம் அவர்களின் வாழ்க்கை, இன்றைய தலைமுறைக்குத் தன்னம்பிக்கையும் பண்பாடும் கற்பிக்கும் ஒரு வாழும் பாடமாக உள்ளது.

நேற்று வியாழக்கிழமை மாலை நீண்ட அஞ்சலி உரைகளோடு அவரது இறுதிச் சடங்கு களுதாவளை மயானத்தில் நடைபெற்றன.




# மட்டு. புனித மிக்கேல் கல்லூரியில் வரவேற்புக் கோபுரம் திரை நீக்கம்





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் புனர்நிர்மானம் மேற்கொள்ளப்பட்ட வரவேற்பு கோபுரத்தின் புனித மிக்கேல் திருவுருவச்சிலையைத் திரை நீக்கும் நிகழ்வு பாடசாலையில் அதிபர் அன்டன் பெனடிக் ஜோசப் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட அருட்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளினால் ஆசீர்வாதம் வழங்கப்பட்டு புனித மிக்கேலின் திருவுருவச்சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

புனித மிக்கேல் கல்லூரியின் 94 ஆண்டில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட வரவேற்பு கோபுரம் நேற்றுத் திரை நீக்கம் செய்யப்பட்டது.

மாவட்டத்தின் மிகவும் பழைமையான பாடசாலைகளில் ஒன்றான புனித மிக்கேல் கல்லூரியில் ஒழுக்கத்துடன் கூடிய கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய மட்டத்தில் பல தரப்பட்ட போட்டிகளில் இப் பாடசாலை மாணவர்கள் வெற்றி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பில் 40 வருடங்களாகக் காடாக இருந்த மாங்காடு விதானையார் வீதி மீண்டும் திறந்து வைப்பு





**(மட்டக்களப்பு நிருபர்)**

நாற்பது வருடங்களாகக் காடாக இருந்த மாங்காடு விதானையார் வீதி மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக் குட்பட்ட மாங்காடு விதானையார் வீதி கடந்த 40 வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் பற்றைக்காடாகக் காணப்பட்டு வந்தது. இதனால் அப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொளளும் விவசாயிகள் பல சவால்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த விடயம் தொடர்பில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளரிடம் அப்பகுதி மக்கள் எடுத்துக் கூறியமையை யடுத்து இவ் வீதியியை ஜே.சி.பி இயந்திரம் மூலம் துப்பரவு செய்து, பாவனைக் குரிய வீதியாக செப்பனிடும்பணி நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அப்பகுதி பொதுமக்கள் பிரதேச சபையின் இந்த செயற்பாட்டிற்கு நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியிலுள்ள சுமார் 150 மேற்பட்ட விவசாயிகளின் மிக நீண்ட நாள் கோரிக்கையாக அமைந்த இந்தப் பாதை செப்பனிடப்பட்டமை விவசாயிகளுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகப் பார்க்கப் படுகின்றது.





# தரம் ஒன்றுக்கான கல்வி மறுசீரமைப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது

2026 ஆம் ஆண்டு தரம் ஒன்றுக்கான புதிய கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தல் மற்றும் முறையாக வகுப்புகளை ஆரம்பிக்கும் தேசிய நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பிரதமர், கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பு மாவட்டத்தின் அத்துருகிரிய குணசேகர வித்தியாலயத்தில் தேசிய நிகழ்வு நடைபெற்றது.

பிரதமர், கல்வி அமைச்சர் கலாநிதி ஹறிணி அமரசூரிய, தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நலீன் ஹேவகே, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க களுவெவ, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

புதிய கல்வி மறுசீரமைப்பிற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட வகுப்பறைகளை பிரதமர் உள்ளிட்ட தரப்பினர் கண்காணித்தனர்.

தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை இணைத்துக் கொள்ளும் உத்தியோகபூர்வ நிகழ்வும் பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

















# முன்னேற்ற பாதையில் செல்லும் இலங்கையின் ஆடை ஏற்றுமதி



2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தை விட 23.03 மில்லியன் டொலரால் அதிகரித்துள்ளது.

அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து கிடைத்த கேள்வி அதிகரிப்பே இதற்கு பிரதான காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கேள்வி அதிகரிப்புடன் டிசம்பர் மாதத்தில் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ள இலங்கையினால் முடிந்துள்ளதாக ஆடை சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

2024 டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2025 டிசம்பர் மாதத்தில் அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 6.49 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், அது 178.29 மில்லியன் டொலர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தோட்டத் தொழிலாளர்களின் 1,750 ரூபா சம்பள உயர்வு ஒப்பந்தம் இன்று கைச்சாத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,750 ரூபா வரை அதிகரிப்பதற்குத் தேவையான இறுதி ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்திடப்படவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 1,350 ரூபாவிலிருந்து 1,550 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன், மேலதிகமாக 200 ரூபா வருகைக்கான கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இந்த சம்பள உயர்வு தொடர்பான உடன்படிக்கை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு இடையில் இன்று காலை அமைச்சில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இது தோட்டத் தொழிலாளர்களின் 200 ஆண்டுகால வரலாற்றில் வழங்கப்பட்ட அதிகூடிய சம்பள உயர்வு என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்காக 2026 வரவுசெலவுத் திட்டத்தில் 5,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.




# ஓய்வுத் திட்ட விண்ணப்பங்களை இன்றைக்குள் மீளப்பெறமுடியும்

## இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு இறுதி அழைப்பு

சுயவிருப்பத்தின் அடிப்படையிலான ஓய்வுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள், தேவைப்படின் இன்றைய தினத்துக்குள் அந்த விண்ணப்பங்களை மீளப்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் கே.எஸ். ஐ. குமார, இந்த விடயத்தை அறிவித்துள்ளார்.

2025 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தாலும், அந்த விண்ணப்பங்களை மீளப் பெற்றுக்கொண்டு புதிய நிறுவனத்துடன் இணையவுள்ள ஊழியர்களுக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

எனினும், நாளைய தினத்துக்குப் பின்னர் அந்த விண்ணப்பங்களை மீளப் பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்றைய தினத்துக்குள் பொது முகாமையாளருக்கு கிடைக்கும், சுயவிருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை மீளப்பெறும் கோரிக்கைகளை மாத்திரம் அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றைய தினத்துக்கு பின்னர் அத்தகைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்குமாறு, அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் கே.எஸ்.ஐ.குமார தெரிவித்துள்ளார்.

# கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான வழக்கு; தொழிலதிபருக்கு பெப்ரவரி 10 வரை விளக்கமறியல்



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான பணமோசடி விசாரணைத் தொடர்பில், கைது செய்யப்பட்ட தொழிலதிபர் ஒருவரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, தனது பதவிக்காலத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுமார் 748 மில்லியன் ரூபா பணத்தை ஈட்டினார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தைச் சலவை செய்த விவகாரம் குறித்து கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்த பாரிய பணமோசடி வலையமைப்பில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மேற்படி தொழிலதிபர் கைது செய்யப்பட்டார்.

தனக்குச் சொந்தமில்லாத 30 மில்லியன் ரூபா பணத்தை, அது சட்டவிரோதமானது என்று தெரிந்தே தனது வசம் வைத்திருந்தார் என அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட ஆதாரங்களை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை பெப்ரவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.



# லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் 2025 இல் 84 அரச அதிகாரிகள் கைது

இலங்கையில் கடந்த 2025 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட 130 விசேட சோதனைகளின் மூலம், 84 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என லஞ்ச அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் அதிகளவானோர் பொலிஸை சேர்ந்தவர்களாவர்.

மொத்தம் 30 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் குழுவில் 13 பொலிஸ் சார்ஜண்ட், 9 பொலிஸ் கான்ஸ்டபிள்கள், 4 உ ப பொலிஸ் பரிசோதகர்கள், 2 பிரதம பொலிஸ் பரிசோதகர்கள், ஒரு பொலிஸ் பரிசோதகர் மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஓட்டுநர் ஆகியோர் அடங்குகின்றனர்.

இதே காலப்பகுதியில் 15 அரசியல்வாதிகளும் ஊழல் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

# விவசாயிகளுக்கான விசேட காப்புறுதி மாதம்

## பெப்ரவரி முதல் அமுல்



விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்கும் விவசாயக் காப்புறுதிச் சபையானது, விவசாயிகளின் நலன் கருதி 2026 பெப்ரவரி மாதத்தைக் காப்புறுதி மாதம் என அறிவித்துள்ளது.

நெல், மக்காச்சோளம், உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், சோயா பீன்ஸ் மற்றும் மிளகாய் உள்ளிட்ட அனைத்துப் பயிர்களுக்கும் காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியும்.

வறட்சி, வெள்ளம், காட்டு யானைகளின் தாக்குதல், பூச்சித் தாக்கம், தீ விபத்து மற்றும் பயிர் நோய்களால் ஏற்படும் சேதங்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் இழப்பீடு வழங்கப்படும்.

மிகக் குறைந்த காப்புறுதித் தவணைப்பணத்தைச் செலுத்துவதன் மூலம், இயற்கை அனர்த்தங்கள் உள்ளிட்ட அனைத்துப் பயிர்ச் சேதங்களுக்கும் உரிய காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.

பயறு, உளுந்து, குரக்கன், நிலக்கடலை, எள்ளு போன்ற பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 60,000 ரூபா இழப்பீட்டைப் பெறுவதற்கு, காப்புறுதித் தொகையில் 7 வீதத்தை தவணைப்பணமாகச் செலுத்த வேண்டும்.

வள்ளிக்கிழங்கு, மரவள்ளி, பீட்ரூட், கோவா, கரட், லீக்ஸ், வெங்காயம், தக்காளி போன்ற பயிர்களுக்கும் காப்புறுதித் தொகையில் 7 வீதத்தை செலுத்துவது போதுமானதாகும்.

உதாரணமாக வள்ளிக்கிழங்குச் செய்கையில் ஏக்கர் ஒன்றுக்கு 100,000 ரூபா காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற, 7,000 ரூபாவை தவணைப்பணமாகச் செலுத்த வேண்டும்.

மேலும் இஞ்சி, மஞ்சள், கருவா, மிளகு, அன்னாசி, பப்பாளி மற்றும் வாழை போன்ற நீண்டகாலப் பயிர்களுக்கும் மிகவும் சலுகை அடிப்படையிலான மற்றும் கவர்ச்சிகரமான காப்புறுதித் திட்டங்களைச் சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சாத்தியமான பயிர்ச் சேத அபாயங்களிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு விவசாயக் காப்புறுதிச் சபை விவசாயிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் அல்லது மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# நிலக்கரி கொள்வனவில் இடம்பெற்ற முறைகேடு

## மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியை விடவும் பாரிய ஊழல் ஒன்று தற்போதைய தரமற்ற நிலக்கரி கொள்வனவு "டெண்டர்" மூலம் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிலக்கரி கொள்வனவுக்கான கேள்விப்பத்திர நடைமுறையில் ஆரம்பம் முதலே பாரிய முறைகேடுகள் நடந்துள்ளன.

வழக்கமாக 42 நாள்கள் வழங்கப்பட வேண்டிய கால அவகாசம், தற்போது 21 நாள்களாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல தகுதியான நிறுவனங்கள் இதில் பங்கேற்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளன.

முன்பு 5 லட்சம் மெட்ரிக் தொன் நிலக்கரி இறக்குமதி செய்திருக்க வேண்டும் என்ற தகுதியும், 1 லட்சம் மெட்ரிக் டொன்னாக குறைக்கப்பட்டுள்ளது. இது சிறிய நிறுவனங்களுக்கு சாதகமாக மாற்றப்பட்டு, ஊழலுக்கு வழிவகுத்துள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான 5,900 கிலோ கலோரி தரம் கொண்ட நிலக்கரி தற்போது கொண்டுவரப்படும் கப்பல்களில் இல்லை என்பது ஆய்வுகளில் உறுதியாகியுள்ளது.

அத்தோடு, தரம் குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதால் மின் உற்பத்தி இயந்திரங்களுக்குப் பாதிப்பு ஏற்படும். அத்துடன் 300 மெகாவாட் மின்சாரத்தை முழுமையாக உற்பத்தி செய்ய முடியாமல் போவதால், மேலதிக மின்சாரத்தை அதிக விலைக்கு டீசல் மின் நிலையங்களிடமிருந்து வாங்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் நாட்டுக்கு பாரிய நஷ்டம் ஏற்படும்.

மேலும், முதலாவது கப்பலில் வந்த நிலக்கரி தரமற்றது என நிரூபணமான பின்னரும், அதற்காக 2.1 மில்லியன் டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் அந்த அபராதத் தொகை எவ்வாறு கணக்கிடப்பட்டது என்பது மர்மமாக உள்ளது.

தற்போது மூன்றாவது கப்பலும் வந்துள்ளது. அதன் தரம் முதலாவது கப்பலை விட மோசமாக இருப்பதாகத் தெரிகிறது. இதனை மறைக்கவே துறைமுகத்தில் கிரேன்களில் கோளாறு இருப்பதாகக் கூறி இறக்கும் பணிகளை அரசாங்கம் தாமதப்படுத்துகிறது.

ஏதாவது இரண்டு கப்பல்களில் தரம் குறைவாக இருந்தால் அந்த ஒப்பந்தத்தையே இரத்து செய்ய வேண்டும். ஆனால், அரசாங்கம் அபராதம் விதிப்பதன் மூலம் அந்த நிறுவனத்தைப் பாதுகாக்கப் பார்க்கிறது.

மேலும், தொடர்ந்து தரமற்ற நிலக்கரியைப் பயன்படுத்தினால் மார்ச் மாதத்திற்குப் பிறகு நாட்டில் மீண்டும் மின்-தடை ஏற்படும் அபாயம் உள்ளது. ஒரு ரூபா கூட திருட மாட்டோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மத்திய வங்கி மோசடியை விடப் பெரிய ஊழலில் தற்போது ஈடுபட்டுள்ளது.

இந்த மோசடிகள் தொடர்பில் பொலிஸார் மற்றும் உரிய விசாரணைப் பிரிவினர் முறையான விசாரணை நடத்த வேண்டும் என்றும், ஊழலுக்குப் பெயர் போன "ஸ்பொட் டெண்டர்" முறைக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்." – என்றார்.

# கங்காராம விகாரை பெரஹெர ஊர்வலம் கொழும்பில் விசேட போக்குவரத்துத் திட்டம்

கொழும்பு ஹுனுபிட்டிய கங்காராம விகாரையின் வருடாந்த நவம் மகா பெரஹெர ஊர்வலத்தை முன்னிட்டு, நாளை மற்றும் பெப்ரவரி 1 ஆகிய திகதியில் கொழும்பின் பல பகுதிகளில் விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நவம் பெரஹெர ஊர்வலம் இவ்விரு தினங்களிலும் மாலை 6.30 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது. இதனால் ஜினரதன மாவத்தை, ஹுனுபிட்டிய ஏரி வீதி, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை மற்றும் அதனைச் சூழவுள்ள வீதிகளில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பாக பித்தளை சந்தி, கொம்பனித்தெரு சந்தி மற்றும் யூனியன் பெலேஸ் ஊடாக பயணிக்கும் வாகனங்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஊர்வலம் நடைபெறும் நேரங்களில் பொதுமக்களுக்கும் சாரதிகளுக்கும் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைக்கவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஊர்வலம் நிறைவடைந்ததும்வழமைபோலபோக்குவரத்து அனுமதிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# பன்னீர்செல்வத்தை அ.தி.மு.கவில் மீண்டும் சேர்க்க வாய்ப்பு இல்லை

## எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்

"அ.தி.மு.கவின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவின்படி அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். எனவே அவரை கட்சியில் சேர்ப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஓ.பன்னீர் செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கியது என்பது நான் எடுத்த முடிவு இல்லை."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சேலத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி,

"நான் பலமுறை சொல்லிவிட்டேன். அவர் 4 வருடமாக கட்சியில் இணைய வேண்டும் என கேட்டு வருகிறார். அ.தி.மு.கவின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவின்படி அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். எனவே அவரை கட்சியில் சேர்ப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கியது என்பது நான் எடுத்த முடிவு இல்லை. 2500 பொதுக்குழு உறுப்பினர்கள் சேர்ந்த எடுத்த முடிவின்படி, ஓ.பி.எஸ். அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் கட்சிக்கு இழைத்த துரோகம் காரணமாக பொதுக்குழு உறுப்பினர்கள் எடுத்த முடிவு இது.

2026 தேர்தல் முடிவில் அ.தி.மு.கதான் ஆட்சியமைக்கும். தே.மு.திகவுடன் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. கூட்டணி இறுதி செய்யப்பட்டவுடன் உங்களிடம் தெரிவிப்போம். சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கூட்டணி இறுதி வடிவம் பெற்றவுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தையை தொடங்குவோம்."

என்று தெரிவித்துள்ளார்.

# சட்டப்பேரவைத் தேர்தலில் நான்கு முனைகளில் போட்டி

## பிரேமலதா விஜயகாந்த் கணிப்பு



தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாகவும், தற்போதைய அரசியல் சூழலில் சட்டப்பேரவை தேர்தலில் நான்கு முனை போட்டி நிலவ வாய்ப்புள்ளதாகவும் தே.மு.தி.க. பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

'உள்ளம் தேடி இல்லம் நாடி' என்கின்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் பிரேமலதா விஜயகாந்த் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக தென்காசி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். குற்றாலம் பிரதான அருவியை பார்வையிட்ட அவர், குற்றாலநாதர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"சுற்றுலாத் தளமான குற்றாலத்தின் மூலம் ஏராளமானவர்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்கும் நிலையில், அவர்களின் வாழ்வாதாரத்தை ஆண்டு முழுவதும் உறுதி செய்யும் வகையில், குற்றால அருவியின் மேல்பகுதியில் செண்பகாதேவி அருவி அருகே அணை கட்டினால் குற்றால அருவிகளில் ஆண்டு முழுவதும் தண்ணீர் விழுவதற்கான சாத்தியக்கூறு உள்ளது. இதனால் ஆண்டு முழுவதும் சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தர வாய்ப்புள்ளது. நாங்கள் எந்தக் கூட்டணியில் சேர்ந்தாலும் இந்த கோரிக்கையை முன் வைப்போம்.

தமிழகத்தில்சட்டம்–ஒழுங்குமிகவும்சீர்குலைந்துள்ளது. சென்னையில் வட மாநிலத்தை சேர்ந்த ஒரு குடும்பமே கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனை வழங்க வேண்டும்.

தமிழகத்தில் சமீப காலங்களாக சட்டம் – ஒழுங்கு என்பது மிகவும் சீர்குலைந்து வருகிறது. மக்கள் நாள்தோறும் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

தமிழகத்தில் வருகின்ற சட்டப்பேரவை தேர்தலில் தற்போதைய சூழலில் 4 முனை போட்டி நிலவ வாய்ப்புள்ளது. தேமுதிக இந்த தேர்தலில் தனித்து போட்டியிடாது. கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ள நிலையில் சரியான நேரத்தில், சரியான கூட்டணி அமைத்து, கூட்டணி தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்படும்." என்று தெரிவித்தார்.



# முழு அரசு மரியாதையுடன் அஜித் பவார் உடல் தகனம்

விமான விபத்தில் உயிரிழந்த மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவாரின் இறுதிச் சடங்குகள் புனே மாவட்டத்தில் உள்ள பாராமதியில் முழு அரசு மரியாதையுடன் நேற்று நடைபெற்றது. இதில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாராமதியில் உள்ள வித்யா பிரதிஷ்டான் மைதானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிதின் கட்கரி, ராம்தாஸ் அதாவலே, முன்னாள் மத்திய அமைச்சர் சரத் பவார், பா.ஜ.க. தலைவர் நிதின் நபின், மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், ஆந்திரப் பிரதேச அமைச்சர் நர லோகேஷ், முன்னாள் மத்திய அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே ஆகியோர் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

அஜித் பவாரின் உடல் மீது தேசியக் கொடி போர்த்தப்பட்டிருந்தது. முழு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. அஜித் பவாரின் மகன்கள் பார்த் மற்றும் ஜெய் ஆகியோர் தங்கள் தந்தையின் சிதைக்கு தீ மூட்டினர். இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கில் தொண்டர்களும் பொதுமக்களும் பங்கேற்று தங்கள் சோகத்தை வெளிப்படுத்தினர்.

# 16,000 ஊழியர்களை நீக்குகின்றது ‘அமேசன்’




உலகின் மிகப்பெரிய இ-காமர்ஸ் நிறுவனமான அமேசன், தனது கார்ப்பரேட் பிரிவில் பணியாற்றும் 16,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் அந்நிறுவனம் மேற்கொள்ளும் இரண்டாவது பெரிய பணிநீக்கம் இதுவாகும்.

அமேசன் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் பெத் காலெட்டி, இது குறித்து வெளியிட்ட பதிவில்,

“நிறுவனத்தின் படிநிலைகளைக் குறைக்கவும், அதிகாரத்துவத்தைக் களைந்து உரிமையை அதிகரிக்கவும் இந்த மாற்றங்கள் செய்யப்படுகின்றன” என்று குறிப்பிட்டுள்ளார்.

அமேசன் ஏற்கனவே கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 14,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்திருந்தது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 16,000 இடங்களுடன் சேர்த்து, 2023 ஆம் ஆண்டிற்குப் பிறகு அமேசான் மேற்கொள்ளும் மிகப்பெரிய ஆட்குறைப்பு நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

கொரோனா பேரிடர் காலத்தில் ஆன்லைன் வர்த்தகம் அதிகரித்தபோது, அமேசான் தனது பணியாளர்களின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தியது. தற்போது நிலைமை சீராகியுள்ளதாலும், ஏஐ தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியாலும், கூடுதல் பணியாளர்களின் தேவை குறைந்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமேசன் சி.இ.ஓ. ஆண்டி ஜாசி, கடந்த ஜூன் மாதமே “வரும் ஆண்டுகளில் ஏ.ஐ. தொழில்நுட்பம் கார்ப்பரேட் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்” என்று எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குப் புதிய வேலை தேடிக்கொள்ள 90 நாள்கள் அவகாசம் வழங்கப்படும் என்றும், அப்படி கிடைக்காதபட்சத்தில் அவர்களுக்குப் பணிநீக்கக் கால ஊதியம் மற்றும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், எந்தெந்த நாடுகளில் இந்தப் பணிநீக்கம் அதிகம் இருக்கும் என்பது குறித்த தெளிவான விவரங்களை அமேசன் இன்னும் வெளியிடவில்லை. இந்தியாவில் உள்ள அமேசான் அலுவலகங்களும் இதில் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

இதேபோல், பின்டரெஸ்ட் மற்றும் யு.பி.எஸ். போன்ற மற்ற முன்னணி நிறுவனங்களும் ஏ.ஐ. தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஆயிரக்கணக்கான ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருவது மென்பொருள் நிறுவன ஊழியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



# இங்கிலாந்தில் கருணை கொலைக்கு அனுமதிக்கும் சட்ட மசோதாவை நிறைவேற்றுவதில் பாரிய சவால்!

இங்கிலாந்தில்கருணைக்கொலைக்கு அனுமதி அளிக்கும் சட்ட மசோதாவை நிறைவேற்றுவதில் பல அரசமைப்புச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு அளித்தாலும், மேலவை உறுப் பினர்களின் கடும் எதிர்ப்பால் இந்த மசோதா சட்டமாவதில் பெரும் சிக்கல் நிலவுகிறது.

இதேவேளை, மசோதாவிற்கு ஆதர வளிப்பவர்கள், மேலவையின் தடையை மீற நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் உள்ள அபூர்வ அதிகாரங்களைப் பயன்படுத்தப் போவதாக எச்சரிக்கின்றனர்.

இருப்பினும், இந்த மசோதா பாதுகாப் பற்றது என்றும், இது வலுவற்ற நிலை யில் உள்ள மக்களைப் பாதிக்கக்கூடும் என்றும் எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்ற னர்.

இந்த விவகாரத்தில் அரசு தலையிட்டு ஒரு சமரசத் தீர்வை எட்ட வேண்டும் அல்லது ஒரு குழுவை அமைத்து ஆராய வேண்டும் என்ற ஆலோசனைகளும் எழுந்துள்ளன.

இந்நிலையில், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது ஒரு ஜனநாயகத் தேவையா அல்லது ஆபத்தான முடிவா என்பதே விவாதத்தின் மையமாக உள் ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்தார் இங்கிலாந்துப் பிரதமர்

08 ஆண்டுகளின் பின்னர் ஒரு பிரிட்டிஷ் தலைவரின் முதல் பயணமாக பெய்ஜிங் சென்றுள்ள இங்கிலாந்துப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் நேற்று வியாழக் கிழமை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்துத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பீஜிங்கின் மக்கள் மண்டபத்தில் நடந்த சந்திப்பைத் தொடர்ந்து இரு தலை வர்களும் நெருக்கமான மூலோபாய கூட்டாண்மைக்கு அழைப்பு விடுத்தனர்.

இங்கிலாந்து பொருளாதாரத்தை உயர்த்த சீனாவுடன் ஒரு நவீன உறவை உருவாக்க விரும்புவதாக ஸ்டார்மர் இந்த சந்திப்பின் போது ஜி ஜின்பிங்கிடம் கூறினார்.

பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளின் மீள்கட்டமைப்பினை குறிக்கும் வகையில் இந்த அழைப்பு வந்தது.

நான்கு நாள்கள் சீனப் பயணத்தின் ஸ்டார்மர், சீனப் பிரதமர் லி கியாங்கை யும் சந்திக்கவுள்ளார்.

மத்திய இடதுசாரி தொழிலாளர் கட்சி அரசாங்கத்தின் தலைவரான ஸ்டார்மர், தான் வாக்குறுதியளித்த வளர்ச்சியை வழங்க போராடி வருகிறார்.

சீனா தொடர்பில் உளவு பார்த்தல், மனித உரிமைகள் குறித்த நீடித்த சந்தே கங்கள் இருந்தபோதிலும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்து டனான உறவுகளை மேம்படுத்துவதை முன்னுரிமையாகக் கொண்டுள்ளார்.

இறுதியாக இங்கிலாந்துப் பிரதமராக இருந்த தெரேசா மே 2018 ஆம் ஆண்டு சீனாவுக்கு விஜயம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# இன்றைய ராசி பலன்கள் - 30.01.2025




உங்கள் தினசரி செயல்களை செய்வது கடினமாக இருக்கும்.முக்கிய மான முடிவுகளை இன்று எடுக்க வேண் டாம். இன்று அமைதியுடன் இருக்க வேண் டியது அவசியம்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். உங்கள் சக பணியாளர் களுடன் உரையாடும் பொழுது அமைதியான முறையை கடைபிடிக்க வேண்டும்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் நட்போடு பழகுங்கள்.

பணத்தை தக்க வைத்துக்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். செலவுகளை முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

இன்று நரம்பு சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் காணப்பட லாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




சாதகமான பலன்களுக்கு உங்கள் புத்திசாலிதனத்தில் நம்பிக்கை வைத்து செயலாற்றுங்கள்.உங்களது நேர் மறையான எண்ணங்களும் தைரியமும் இதற்கு உதவும்.

உங்கள் பணி மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களிடம் உள்ள திறமைகளை வெளிக் கொணர வேண்டும்.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பயனுள்ள வகையில் இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




பொழுதுபோக்கு நடவடிக்கை களில் ஈடுபடுவதன் மூலம் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க இயலும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறிது முயற்சி எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றினால் திறமையாக செயலாற்ற முடியும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையிடம் பேசும் போது பொறுமை அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங் களிடம் பணம் இருந்தாலும் திருப்திகரமான நிலை இருக்காது.

செரிமானக் கோளாறு பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும்.உங்கள் உணர்வுகளை கட்டுப் படுத்த வேண்டும்.தியானம் அல்லது யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வது கடினம்.அதிகரிக்கும் வேலை காரணமாக தவறுகள் நேரலாம்.

உங்கள் துணையுடன் சகஜமாகப் பேசுவதன் மூலம் உறவில் திருப்தி நிலவும்.

இன்று பணத்தை சரியான முறையில் பயன்படுத்த இயலாது. பணம் கரைந்து விடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று கவலையின் காரணமாக பதற்றமாகக் காணப்படுவீர்கள்.




மனதில் உள்ள குழப்பங்கள் காரண மாக மேற்கொண்ட செயல்கள் தாம தமாக முடியும். உங்கள் அஜாக்கி ரதை காரணமாக விலைமதிப்பு மிக்க பொருளை இழக்க நேரும்.

இன்று பயணங்கள் ஏற்படலாம். அத னால் பதற்றம் காணப்படும். இந்தப் பயணம் உங் களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்காது.

இன்று விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ளுங்கள். பேச்சுவார்த்தை மூலம் கருத்து வேறு பாடுகளை தீர்க்க முடியும்.

இன்று அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக தேவையில்லாத செலவுகளை எதிர்கொள்ள நேரும். இது தவிர்க்க இயலாதது.

கால்கள் மற்றும் தோள்களில் வலிகள் காணப்படும். உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




ஆன்மீகம் மற்றும் அது சம்பந்த மான ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும். அனுபவம் மூலம் இன்று பாடம் கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

உங்கள் பணிகளை குறிப்பிட்ட நேரத்துக்கு முன் உங்களால் செய்ய இயலும்.இதன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக் கையைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் இனிமையான விஷ யங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்த மான ஜோடிகளாகத் திகழ்வீர்கள்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். வங்கி யிருப்பு அதிகரிக்க முடியும். இது உங்களுக்கு திருப் தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியக் குறைபாடுகள் ஏதும் இருக்காது.




நீங்கள் விரைவாக செயலாற்றி உங்கள் பொறுப்புகளை எளிதில் முடிப் பீர்கள்.உங்கள் கனவுகள் நனவா கும்.உங்களின் நேர்மறையான மனப் பாங்கின் மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள்.

நீங்கள் ஆற்றும் பணியின் மூலம் நற்பலன்கள் கிடைக் கும். உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வ தன் மூலம் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

எதிர்பாராத பண வருவாய் காணப்படும். இதனால் மிகுந்த திருப்தி உங்களுக்கு ஏற்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சௌகரியமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.




நீங்கள் உங்கள் முயற்சியின் மீது நம்பிக்கை வைத்து உங்கள் திறமை களை மேம்படுத்துவதன் மூலம் சாதக மான பலன்களைப் பெறலாம்.

உங்கள் பணிக்கு உங்கள் மேலதி காரிகளின் அங்கீகாரம் கிடைக்க வில்லை என்று நீங்கள் எண்ணுவீர்கள்.இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும்.குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உங்கள் மனதில் உள்ள பதட்டத் தையும் ஏமாற்றத்தையும் காண்பிப்பீர்கள்.

பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் இன்று பணத்தை மிகவும் கவனமாக கையாள வேண்டும். பணத்தைத் திட்டமிட்டு செலவு செய்வது நல்லது.

இன்று கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற உபாதைகளுக்கு ஆளாவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.01.2025




இன்று ஏமாற்றங்கள் காணப்படுவதால் இன்றைய நாளை திட்டமிட வேண்டியது அவசியம்.பொறுமையாக இருந்து மிடுக்குடன் செயல்பட வேண்டும்.இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணிகளைக் கையாளும்பொழுது கவனம் தேவை.எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே வாய் சண்டை நடக்கலாம். அதனால் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். நஷ்டத்தை தவிர்க்க உங்கள் நிதிநிலையை கண்காணிக்கவும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.




நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வதில் நேர்மையாக இருப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் நன் மதிப்பை சம்பாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் அமைதியோடு பேசுவீர்கள். உங்களின் மனம் திறந்த இந்த அணுகுமுறை உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதை உங்கள் குடும்பம் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் வெளியிடம் செல்லுதல் போன்ற பயனுள்ள விஷயங்களுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். இன்று வலிமை மிகுந்து காணப்படுவீர்கள்.




உங்களுக்கு நன்மை பயக்கும் முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.பொதுவாக திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்களால் சுமுகமாக பணியாற்ற இயலும்.உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சம நிலையோடு பழகுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியத்துடனும் திருப்தியுடனும் காணப்படுவீர்கள்.




தியானம் மூலம் மன அமைதியை பெறலாம்.எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய திட்டமிடல் அவசியம்.

இன்று உங்கள் போக்கில் அனுசரனை கடைபிடிப்பதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் சகஜமாக நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எதிர்பாராதவிதமாக பணத்தை இழக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். உடற்பயிற்சி செய்து புத்துணர்வு பெறலாம். இதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக சர்ச்சை வழக்கு விசாரணை ஜூலை 8ஆம் திகதிக்கு!

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனினால் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்திற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



வழக்காளி த.கலையரசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவும், வழக்கின் இடையீட்டு மனுதாரர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.கலீலூர் ரஹ்மான் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவும் ஆஜராகினர்.

இவ்வழக்கின் இடையீட்டு மனுதாரர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.கலீலூர் ரஹ்மான் ஆகியோரும் மன்றுக்கு சமூகமளித்திருந்தனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது பக்க நியாயங்களை மன்றுக்கு முன்வைத்து வாதிட்டார். அதில் இது உப பிரதேச செயலகமல்ல. 1993ம் ஆண்டு முதல் கல்முனை வடக்கு முழுமையான பிரதேச செயலகமாக இயங்கி வருவதாகவும், இந்த செயலகத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், நிரந்தர கட்டடம் இருப்பதாகவும், 250 க்கு அதிகமான உத்தியோகத்தர்கள் கடமை செய்கிறார்கள் என்றும் 3 தசாப்தங்களுக்கு மேல் பிரதேச செயலகமாக இந்த செயலகம் இயங்கியதாகவும், சில வருடங்களுக்கு முன்னர் கல்முனை பிரதேச செயலாளர் இந்த செயலகத்தின் அதிகாரங்கள் சிலவற்றைப் பறித்துள்ளார் என்வும் வாதத்தை முன்வைத்து, இந்த செயலகத்துக்கு வர்த்தமானி அறிவித்தல் இல்லாது விட்டாலும் நாட்டின் பல இடங்களில் அமைச்சரவை அனுமதியுடன் சில செயலகங்கள் இயங்குகின்றன, இந்த செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக இந்த நீதிமன்றம் அங்கீகரிக்க வேண்டும் என்றார்.

வழக்கின் முக்கியத்துவம் கருதி எதிர்தரப்பு சட்டத்தரணிகளின் வாதத்தையும் நீதிமன்று கேட்டறிந்து இந்த வழக்கின் விசாரணைக்கு முழுநாள் ஒதுக்கவேண்டும் என்பதால் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை 08ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.